மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 78 | 10.06.2023 (சனிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# முடிவெடுக்கும் காலத்திலிருக்கிறோம்! தொடர்ந்தும் நாங்கள் ஏமாற முடியாது!!
## தமிழ் அரசுக் கட்சி இடித்துரைப்பு..!

"நாங்கள் தொடர்ந்தும் உங்களால் ஏமாற்றப்படுகின்றோம். இனியும் நாம் ஏமாந்து கொண்டிருக்க முடியாது. முடிவெடுக்கும் கால கட்டத்துக்குள் நாம் வந்துவிட்டோம்."- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் எடுத்துரைத்தது இலங்கை தமிழ் அரசுக் கட்சி.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. இந்தச் சந்திப்புக்கு ரெலோ மற்றும் புளொட் அமைப்புக்கு ஜனாதிபதி செயலகத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் பங்கேற்கவில்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, பக்கம் 5

## நல்லிணக்க செயற்பாடுகளுக்கான செயற்றிட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் அதிரடி உத்தரவு



நல்லிணக்க செயற்பாடுகளுக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த உரிய சட்டமூலத்தின் தயாரிப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கியுள்ளார். நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகள் பற்றிய ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதுபற்றி கருத்து வெளியிட்டார். சட்டவாக்கம் நிறுவன ரீதியான செயற்பாடுகள், காணிப் பிரச்சினை, சிறைக்கைதிகளை விடுதலை செய்தல், அதிகார பகிர்வு ஆகிய ஐந்து விடயங்கள் தொடர்பான பக்கம் 5

## தமிழ் மக்கள் சட்டம், ஒழுங்கு மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்: சட்டவாட்சி கோட்பாட்டை அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டும் : தேசிய மக்கள் சக்தி

ජාතික ජන බලවේගය
தேசிய மக்கள் சக்தி
NATIONAL PEOபக்கம் 5

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது.தேசிய நல்லிணக்கம் தொடர்பில் கதைத்துக் கொண்டு முறையற்ற வகையில் செயற்படும் போது தமிழ் மக்கள் சட்டம், ஒழுங்கு மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்.

பொருளாதார மீட்சிக்கு முன்னர் முதலில் சட்டவாட்சி கோட்பாட்டை அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (8) இடம்பெற்ற நிதி,பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய

## சீனாவிற்கு குரங்குகளை அனுப்புங்கள்! இல்லை என்றால் சொட்கண் துப்பாக்கியை வழங்குங்கள்


பக்கம் 5

நாட்டின் முதுகெலும்பாக விவசாயிகள் இருக்கின்றார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாக கோட்டாபய நாட்டை விட்டு ஓடியதை குறிப்பிடமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (09.06.2023) உரையாற்றும் போதே இதனை இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

மேலும் குறிப்பிடுகையில்,விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள மிகவும் மோசமான பிரச்சினையாக குரங்குகளின் செயற்பாடுகள் இருக்கின்றது.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு கொண்டிருக்கும் நிலையில் விவசாயிகளை பாதுகாக்க

## இனவெறியர்களை வைத்துக்கொண்டு இனநல்லிணக்கத்தை உருவாக்க முடியுமா? கஜேந்திரன் ஆவேசம்!


பக்கம் 5

இனவெறியர்களை பேச்சாளர்களாக வைத்துக் கொண்டு இனநல்லிணக்கத்தை உருவாக்க முடியுமா என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

## விக்னேஸ்வரன் அரசியலில் தொடர்வது தமிழ் மக்களுக்கு ஒரு சாபக்கேடு : பொ.ஐங்கரநேசன்


பக்கம் 5

விக்னேஸ்வரன் ஐயா அரசியலில் தொடர்வது தமிழ் மக்களுக்கு ஒரு சாபகேடு என்றுதான், நான் அவருடன் பயணிப்பதை நிறுத்தி கொண்டேன் என முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர்

## இடைக்கால நிர்வாக சபை பேச்சு திருப்தியளிக்கின்றது: விக்னேஸ்வரன் எம்.பி


பக்கம் 5

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் திருப்தியளித்ததாகத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் நேற்று முன்தினம் (08.06.2023) நடந்த சந்திப்பின்

# காட்டில் பயணிக்கவிருக்கும் பாதயாத்திரீகர்களுக்கு சித்தர்கள் குரல் சங்கர் ஜியின் அன்பு அறிவிப்பு.



இம்முறை எதிர்வரும் 12 ஆம் தேதி திங்கட் கிழமை முதல் காட்டில் கதிர்காம பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி ஓர் அன்பான அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவரது அறிவிப்பில்.. கதிர்காம பாதை திறக்கும் போது யாத்திரை செல்லும் அடியார்கள் பிளாஸ்டிக் போத்தல் மற்றும் பொலித்தீன் கொண்டு செல்வதை தவிருங்கள். மீறி தேவை ஏற்படுத்தி கொண்டு வரும் சமயத்தில் அந்த அந்த இடத்திலேயே குப்பைகளை எரித்து விடுங்கள். இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு எமது உறவுகள்தான் அடியார்களாக செல்லப் போகின்றார்கள். அவர்களுக்கும் நாம் செய்வதை சொல்லிவிட்டால் அவர்களும் அதனை பின் தொடர்வார்கள்....

எமது நாடு, எமது பாரம்பரிய தெய்வீக சித்தர்கள் ரிஷிகள் உலா வரும் இடம். யாத்திரை எப்போது தொடங்கியது என்பது இதுவரை யாருக்கும் தெரியாது. தொடர்ந்து செல்கின்றோம். முருகனின் அருள் மட்டுமல்ல, அதிசயங்களும் நிறைந்த புண்ணிய பூமி. எவ்வளவோ நேர்த்திகள். அவ்வளவிற்கும் அங்குள்ள தெய்வங்களின் அருளாசிகள். காணக்கிடைக்காத அற்புதங்கள். வருகின்றவர்களின் எண்ணங்களை, கஷ்டங்களை நிறைவேற்றும் புண்ணிய தலத்தினை கண்குளிர கண்டு விடைபெறும் அமைதியே அமைதி.

ஒரு வருடத்தில் ஒருமுறைதான் வருவதுண்டு. அதனை நாமே சரியான பாதையில் ஒழுக்க நெறி தவறாது கடைப்பிடித்து செயற்பட்டால் இனிவரும் சந்ததியினரும் வழி தவறாது செயற்படுவார்கள். - இவ்வாறு குறிப்பிடுகிறார்.

# உகந்தமலை முருகன் ஆலயத்திற்கு புதிய பரிபாலன சபை தெரியும் கூட்டம்.



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்திற்கு நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் புதிய பரிபாலன சபை தெரியும் கூட்டம் நேற்று (9) வெள்ளிக் கிழமை லாகுகலை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விசேட கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அதிதியாக கலந்து கொண்டார்.

உகந்த மலை முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் பாணமை விகாராதிபதி மற்றும் மட்டக் களப்பு அம்பாறை மாவட்ட இந்து கலாச் சார உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிக்குடி முதல் பாணமை வரையுள்ள இந்து பக்தர்கள் கலந்து கொள்ள முடியும் என்று அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதனால் சுமார் ஆயிரம் பக்தர்கள் வாகனங்களில் காலையில் வந்து சேர்ந்தனர். முதலில் ஆலய பரிபாலன சபை மற்றும் உறுப்பினர்களின் பணிகள் கடமைகள் பற்றி பிரதேச செயலாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

# வாழைச்சேனையில் கசிப்பு உற்பத்தில் ஈடுபட்ட 4 பெண்கள் கைது

## நிலத்தில் புதைத்து வைத்திருந்த 4 இலச்சம் மில்லி லீற்றர் கோடா மீட்பு...



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யூனியன் கொலனி பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை) மாவட்ட புலனாய்வு பிரிவினர் பொலிசாருடன் இணைந்து வியாழக் கிழமை (8) முற்றுகையிட்டபோது கலன்களில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலச்சம் மில்லி லீற்றர் கோடாவை மீட்டதுடன் உறவினர்களான 4 பெண்களை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் குறித்த பிரதேசத்தில் வீடுகளில் கசிப்பு உற்பத்தி செய்துவரும் நிலையங்களை சம்பவதினமான நேற்று மாலை பொலிசாருடன் புலனாய்வு பிரிவினர் இணைந்து முற்றுகையிட்டனர். இதன் போது வீட்டின் அருகிலுள்ள பாழடைந்த காணியின் நிலத்தை தோண்டி அங்கு கலன்களில் கசிப்பு உற்பத்திக்கான கோடாவை புதைத்து வைத்திருந்த நிலையில் அவற்றை தோண்டி எடுத்தனர்.

இவ்வாறு நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலச்சம் மில்லி லீற்ற் கோடாவை மீட்டதுடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட உறவினர்களான அருகருகே அமைந்துள்ள வீடுகளைச் சேர்ந்த 30,40,35, 50 வயதுடைய 4 பெண்களை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு



அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அணர்த்த முகாமைத்துவத்தை உள்ளடக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் செயலமர்வு வியாழக்கிழமை அக்கறைப்பற்றில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் அக்கறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் அக்கறைப்பற்று பிரதேச செயலாளர் அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அஸ்லம் சஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கருத்துரையும் வழங்கினர்.

இங்கு, கலந்து கொண்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு அணர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கமளித்ததுடன் அதனை கட்டுப்படுத்துவதற்கான வழி வகைகள் தொடர்பிலும் வளவாளர்கள் அறிவுறுத்தினர்.

உலக அளவில் அணர்தங்களினால் பாதிக்கப்படும் நாடுகள் வரிசையில் இலங்கை ஐந்தாம் இடத்தை வகிப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டதுடன் அம்பாரை மாவட்டத்தில் திட்டமிடப்படாத பாதை அபிவிருத்தி வேலைத்திட்டங்களே பாரிய வெள்ள அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இங்கு தெரிவித்தனர்.

# முல்லைத்தீவு பகுதியில் வெட்டுகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட 5 வயது குழந்தை - ஒருவர் கைது!



வெட்டு காயங்களுடன் மீட்கப்பட்ட குழந்தையின் மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் புல் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த 51 வயதான சந்தேகநபரான இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - முல்லேரியா, ஹல்பராவ பிரதேசத்தில் வெட்டு காயங்களுடன் குழந்தையின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

119 அவசர இலக்கத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முல்லேரிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது நேற்று முன்தினம் (08) பிற்பகல் குழந்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலபே - ஹல்பராவ பகுதியை சேர்ந்த சுமார் 5 அரை வயதான குழந்தையொன்றே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் தந்தை குடும்பத்தை விட்டு பிரிந்து வாழும் நிலையில், தாய் பகல் நேரங்களில் வேலைக்கு செல்வதால் தாத்தா மற்றும் பாட்டியின் அரவணைப்பில் குழந்தை இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

# வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரத்தை உருவாக்கி அசத்திய யாழ். விவசாயி..!



வெங்காய செய்கையினை இலகுவாக்கும் வகையில் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார்.

அச்சுவேலி பகுதிகளை சேர்ந்த விவசாயி ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேலாக லாண்ட் மாஸ்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வெங்காயத்தை நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் செலவினங்களை குறைத்து வெங்காயத்தினை நடுகை செய்யும் முறையினை கண்டுபிடித்துள்ளார்.

இதனூடாக வெங்காயத்தினை நடுகை செய்வதற்கு ஏற்படும் செலவீனத்தை பல மடங்கு குறைத்து அதன் ஊடாக பல ஏக்கர் நிலங்களில் வெங்காயத்தினை 18 வெற்றி கண்டுள்ளார். இதனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக வடமாகாண விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் இன்றைய தினம் நடுகை செய்யும் முறை காண்பிக்கப்பட்டது.

அத்துடன் குறிந்த இயந்திரத்தை எவ்வாறு இயக்குவது அதன் மூலம் எப்படி நடுகையினை மேற்கொள்வது போன்ற விடயங்கள் பயனாளிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

குறைத்த நடுகை முறை வெற்றி அளிக்கும் முறையாக விவசாய அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டால் அதனை அனைவருக்கும் பரிந்துரைப்பதற்கு முன்வரவுள்ளனர்.

நிகழ்வில் வடமாகாண விவசாய பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி முன்னாள் விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் விவசாய அதிகாரிகள் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆளுநரின் பங்கேற்புடன் அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு!



அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு “உரிய இடத்தில் தீர்வு” வழங்கும் நோக்கில், நடமாடும் சேவையொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை குறித்ததினத்தில் தெரிவிக்க முடியும் எனவும், அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய விடயங்களை சம்மந்தப்பட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுடன் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், அவர்களுக்கான தீர்வினை அன்றையதினம் 2.00 மணியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, அன்றையதினம் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால், அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ். எம்.பாயிஸ் சுட்டிக்காட்டினார்.

# வவுனியாவில் கைதான 7 விபசார அழகிகளுக்கு தொற்று நோய்..!

## சேவை பெற்றவர்களுக்கு சிக்கல்..!



வவுனியாவில் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட பெண்களிடம் மேற்கொண்ட மருத்துவ பரிசோதனையில் 7 பேருக்கு கொனோறியா மற்றும் ஷர்ப்பீஸ் நோய் தொற்றுக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் நேற்று தெரிவித்துள்ளனர்.

இந் நோயானது பாலியல் உறவின் மூலம் தொற்றாளரிடம் இருந்து பிறருக்கு பரவக் கூடியது ஆகும்.

குறித்த 7 பாலியல் தொழிலாளிகளும் வவுனியா நகரம் மற்றும் தேக்கவத்தை ஆகிய பகுதியில் விபசாரத் தொழில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் எச்.ஐ.வி தடுப்பு பிரிவுக்கு சென்று தம்மை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினரால் கோரப்பட்டுள்ளது.

# எதிர்கட்சி தலைவரை வெளுத்து வாங்கிய அமைச்சர் ஜீவன்..!

## வாயடைத்து போன சஜித்..!



நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாச தோட்ட மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்காத நிலையில் வீடுகள் எங்கே என தன்னிடம் கேள்வி கேட்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மக்களின் வாக்குகளை பெறுவதற்காக அமைச்சு பதவியை எடுக்கவில்லை என தெரிவித்திருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஊவா மாகாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸினால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டத்திற்கு வருகை தருவதாக கூறிய சஜித் பிரேமதாச இறுதி வரை அங்கு வரவில்லை என்றும் இதன் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் மன்னிப்பு கேட்பார் என தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரையில் தோட்ட மக்களிடம் மன்னிப்பு கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

# நியூயோக் நகரில் நடைபெற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் 9வது அரசவை அமர்வு..!



நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது தவணைக் காலத்திற்கான 9வது அரசவை அமர்வு சமீபத்தில் அமெரிக்கா நியுயோக் நகரில் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் நடைபெற்று, அதனை அடுத்து வருகின்ற வார இறுதி நாட்களிலும் அதே போல தமிழீழ மக்களின் விடிவிற்காக தங்கள் உயிர்களை ஆகுதியாக்கிய புனிதர்களை நினைவுகூருகின்ற நாளினை அடுத்து வருகின்ற வார இறுதி நாட்களிலும் அனைத்து நாடுகளிலும் உள்ள அரசவை உறுப்பினர்கள் ஒன்றாக அரசவையை கூட்டி உறுதியேற்புடன் தாயகம் நோக்கிய பணிகளை முன்னெடுப்பது வழமை.

அதற்கமைய வலிசுமந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தினை மனதிலிருத்தி கூடிய அரசவையின் தொடக்க நாள் நிகழ்வுகள் நியூயோர்க் சட்டத்தரணிகள் சங்க மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இதில் இந்து சமுத்திரத்தில் வளர்ந்துவரும் சீனாவின் ஆதிக்கம், இறைமையும், சுதந்திரமும் கொண்ட தமிழீழத்தை அமைப்பதற்கான உலகத்தமிழர்களின் வகிபாகம் ஆகியன கருப் பொருட்களாக எடுக்கப்பட்டதோடு, கட்டமைப்பு ரீதியிலான இனப்படுகொலையை தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் பேசப்பட்டன.

முதல் நாள் அமர்வில், தோழமை உணர்வுடன் பங்குபற்றிய ஆர்மேனிய முன்னாள் ஐ.நா சபைப் பிரதிநிதியும், தற்போதைய ஆர்மேனிய அமெரிக்க அமைப்பின் தலைவரான வன் கிரிகோரியன் அவர்கள் ஆர்மேனிய மக்களின் மீதான இன அழிப்பிற்கும், முள்ளிவாய்க்கால் தமிழ் இனவழிப்பிற்கும் இடையே இருந்த ஒற்றுமைகளை சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார்.

இதன்போது, ஒன்ராரியோ மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி பொதுவாக்கெடுப்பு ஒன்றின் மூலம்தான் ஈழத் தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணலாம் எனக் தெரிவித்துள்ளார்.

மேலும், தாயகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இணைய வழி மூலம் பங்குபற்றி உரையாற்றியதுடன், மாவை சேனாதிராஜா அவர்கள் எழுத்து மூல வாழ்த்துக்களையும் தாயகத்தில் வேகமாக நடைபெற்று வரும் கட்டமைப்பு ரீதியிலான இனப்படுகொலைகள் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதனை தொடர்ந்து, இத்தாலியில் இருந்து "ஐரோப்பிய புதிய தலைமுறை ஒன்றியம்" ஐ சேர்ந்த அருகன் அவர்கள் தங்களது அரசியல் கட்சிக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு நன்றியைத் தெரிவித்து "நன்றிநவிலல்" பட்டயத்தை பிரதமருக்கு வழங்கியுள்ளார்.

பிரான்ஸ்சில் இருந்து சட்டவாளர் தோமஸ் கஸ்டஜோன் அவர்கள் பிரான்ஸ்சில் ஈழத் தமிழர் நிலை குறித்தும், இனப் படுகொலை தொடர்பான பொறுப்புக்கூறல் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் ஆராய்ச்சி மையத்தில் இருந்து அருண்குமார் பரிணமித்துவரும் பல்மைய உலக ஒழுங்கில் தமிழர்களுடைய அரசியல் பெருவிருப்பிற்கு அங்கீகாரம் வழங்குவது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக வணிக வலைபின்னல் தலைவர் சதாசிவம் காணொளி மூலம் உரையாற்றியதோடு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்க தலைவர் அனன் பொன்னம்பலம், தமிழ் அமெரிக்க ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் குழு தலைவர் மீனா இழஞ்செழியன், சங்கம் அமைப்பு சுஜாந்தி, உலகத் தமிழர் அமைப்பு ரவிக்குமார் ஆகியோர் தோழமை உணர்வுடன் உரையாற்றியுள்ளனர்.

மேலும், கனடா நாடாளுமன்ற உறுப்பினர் சாண் சென், கனடாவின் எதிர்க் கட்சித் தலைவர் பியர் மற்றும் மலேசியாவில் இருந்து பேராசிரியர் ராமசாமி ஆகியோர் காணொளி மூலம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வு அவைத்தலைவர், பிரதமர் ஆகியோரின் உரையுடன் ஆரம்பித்தது. பிரதமர் தனது உரையில், இலங்கைத் தீவில் 1600 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதிகளில் 1050 கிலோ மீற்றர் கரையோரப் பகுதிகள் ஈழத்தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு உரியதாக உள்ளதோடு, இலங்கைத் தீவில் மொத்தக் கரையோரப் பகுதிகளில் 66 வீதத்திற்கு உரித்துடையவர்கள் ஈழத் தமிழர்களாக இருந்த போதிலும் இலங்கைத் தீவு குறித்தோ, இந்தியப் பெருங்கடல் குறித்தோ எடுக்கப்பட்ட புவிசார் அரசியல்களில் ஈழத் தமிழர்கள் பங்காளிகளாக இல்லாத நிலையை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர், இப் புவிசார் அரசியலில் எமக்குள்ள பங்கிற்காக நாம் போராட வேண்டும் எனவும், தமிழர் தாயகத்தை அடைய கடலில் ஈழத்தமிழர்களினது இறைமையை தமிழீழ விடுதலைப் புலிகளின் இடர் கால தன்னாட்சி அதிகார சபை வரைபு குறிப்பிட்டிருந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேலவையும் அரசவையும் இணைந்த உரையாடல் ஆரம்பித்திருந்தது. அதில் செனட்டர் ராஜரட்னம் அவர்கள் உலகத் தமிழர்கள் ஒன்றுபடுவதற்கான வழி வகைகள் தொடர்பாகவும், வைத்தியக் கலா நிதி ஜெயலிங்கம் அவர்கள் தமிழ்த் தேசியப் பிரச்சனையும், சிறிலங்கா அரசாங்கத்தின் மீது இந்தியாவின் செல்வாக்கு குறைந்து வருவதும், தமிழர் பகுதிகளில் சீனா எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கரு த்து வெளியிட்டிருந்தார்.

செனட்டர் உஷா சிறீஸ்கந்தராசா தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுவரும் சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கை ஈழத்தமிழர்களின் பாரம்பரியத்தையும், அடையாளத்தையும் அழிக்கும் நோக்கத்துடன் இடம்பெற்று வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தொடர்ந்து, செனட்டர் சத்யா சிவராமன் இன்றைய சர்வதேச அரசியலை ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் உள்ள போட்டியாக வெறுமனே கருத முடியாது என தெரிவித்துள்ளார்.

மேலவை உறுப்பினர்களின் பேச்சுக்களைத் தொடர்ந்து நடைபெற்ற உரையாடல்களில் தமிழ்த்தேசியப் பிரச்சனையை BRICS அமைப்பிற்கும், சீனாவிற்கும் தெரியப்படுத்துவது தொடர்பான கருத்துக்கள் தமிழக சட்டசபையில் பொது வாக்கெடுப்பு தொடர்பாக மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுவது பற்றி பேசப்பட்டுள்ளன.

மேலும், அமைச்சர்கள் தங்களது 6 மாத காலம் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பித்ததோடு, அதுதொடர்பான விவாதங்களும் இடம்பெற்றது.

# யாழில் கல்வியற்ற விளையாட்டு வீரர்களின் எதிர்காலம் கேள்விக்குறி..! ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி சேதுராஜா



இலங்கையில் பரீட்சை முறையில் குறைபாடு காணப்பட்டாலும் தற்சமயம் அதனைத் திருத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றுடன் இலங்கையில் தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆய்வுகள், சிபாரிசுகள் உலகத்தோடு ஒன்றி கட்டமெக்கப்பட்ட காத்திரமானவை என நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் கலாநிதி சேதுராஜா தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்று வரும் கலந்துரையாடலில் இவர் இதனை தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கையில், பாடசாலை செல்லுதல் என்பது கற்றல் என்ற நிலை மாறி தற்போது பாடசாலை செல்லுதல் என்பது கேள்விக் குறியாகியுள்ளது. இதேவேளை கல்வி முறை தோல்வியடையும் பட்சத்திலே தான் மாணவர்கள் போதைப்பொருட் பாவனைக்குள் தள்ளப்படும் நிலை உருவாகின்றது.
வடபகுதியில் புதிதாக பாடம் சாராத் திறன் என்ற செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இதன்படி 60 சதவீத புள்ளிகள் பாடஞ்சார்ந்தும் ஏனையவை பாடஞ் சாராதும் புள்ளியிடும் முறைமை எதிர்வருங்காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
கல்வி நிலையங்கள் இலாப நோக்கை அடிப்டையாகக் கொண்டாலும் சமூக நோக்கையும் அடிப்படையாகக் கொண்டு செயலாற்ற வேண்டும்.
யாழ்ப்பாணத்தில் கல்வியில்லாத விளையாட்டு வீரர்களும் , விளையாட்டு இல்லாத கல்விகற்ற மாணவர்களும் காணப்படுகின்றனர். இவர்களில் கல்வியற்ற விளையாட்டு வீரர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானது. தற்போது பிரச்சினைகள் அதிகரித்த போதும் தலைமைத்துவத் தன்மை மிகவும் குறைந்துள்ளது. இதேவேளை அபிவிருத்தி மேற் கொள்ள வேண்டுமாயின் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும். இது எமது பிரதேசங்களில் கேள்விக்குள்ளான நிலையிலுள்ளது. வடக்கைப் பொறுத்தவரை மேலிருந்து ஏதாவது அழுத்தம் மேற்கொள்ளும் வண்ணமே செயற்படும் நிலை காணப்படுகின்றது. என்றார்

## முடிவெடுக்கும் காலத்திலிருக்...

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன்,

”ஜனாதிபதியுடனான பேச்சின் போது அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினோம். தீர்வு தொடர்பான அவரது போக்கு சரியாகத் தென்படவில்லை. அரசமைப்பு சீர்திருத்தத்தைப் பற்றி மாத்திரம் அவர் சிந்திக்கின்றார். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவரிடம் கூறியுள்ளோம். தீர்வு தொடர்பில் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென எடுத்துரைத்தோம். அரசியல் தீர்வை விரைந்து காண வேண்டும். இல்லையேல் தீர்க்கமான முடிவை நாம் விரைவில் எடுப்போம்” - என்றார்.

இதேவேளை, அரசுடன் பலமுறை பேச்சு நடத்தியுள்ளதாகவும், அரசு பல கால எல்லைகளை குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் எதுவும் நடக்கவில்லை என்றும் தமிழ் அரசுக் கட்சியினர் நேற்றைய பேச்சில் குறிப்பிட்டனர்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வில்லை, நாடு எதிர்கொள்ளும் தேர்தல்களும் இல்லையெனச் சுட்டிக்காட்டி, இதே நிலை நீடித்தால் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பில்லாமல் போய் விடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பல முறை ஜனாதிபதியிடம் தெரிவித்தாயிற்று, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வு மிகக் குறுகிய காலத்துக்குள் - அடுத்த சில மாதங்களுக்குள் முன்வைக்கப்பட வேண்டும். அரசு அதைச் செயற்படுத்தத் தவறினால், தமிழ் மக்களுக்குள்ள வெளியாக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில், அதற்கான நடவடிக்கைகளில் இறங்குவோம் என்று இரா.சம்பந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தலை இப்போதைக்கு நடத்தும் யோசனை தனக்கில்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களில் இடைக்கால சபையொன்றை அமைப்பதே தனது திட்டமென்றார். வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாக சபையா அல்லது இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனியான நிர்வாக சபைகளா என தமிழ் அரசுக் கட்சியினர் கேட்டனர். அது பற்றிய தெளிவான பதிலை ஜனாதிபதி வழங்கவில்லை. அப்படியான யோசனை உள்ளதாகவும், அது பற்றி தமிழ் அரசுக் கட்சியுடனும், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் கலந்து பேசிச் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், அரசியல், காணி உள்ளிட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழுக்கள் அமைத்துள்ளதாகவும், அந்த அறிக்கைகளை தமிழ்க் கட்சிகளிடம் கையளித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இரண்டு மாதங்களில் அறிக்கை கிடைத்து விடும் என்றும், விரைவில் தனது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜுலை மாதம் மீண்டும் பேச்சு நடத்தலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பின் போது மகாவலி ஜே, எல் வலயங்கள் பற்றி ஜனாதிபதியுடன் பேசியதாகவும், அவற்றை உடன் நிறுத்த நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி உத்தரவாதமளித்ததாகவும் தமிழ் அரசுக் கட்சியினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கூடி ஆராயவுள்ளது.

## இனவெறியர்களை வைத்துக்...

மேலும் தெரிவிக்கையில், கடந்த 5 ஆம் திகதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் புலனாய்வாளருக்குமிடையில் ஏற்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரிடம் எந்த வித வாக்குமூலமோ அல்லது அறிக்கையோ பெற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் பொலிஸ் துறையின் பேச்சாளர் எவ்வாறு ஒரு உண்மைக்கு புறம்பான கருத்தை வெளியிட்டார்?

இதற்கமைய சிங்கள சமூகத்தின் மத்தியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எதிரான பொய்யான கருத்துக்கள் பரவ எவ்வாறு வாய்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறான இனவெறியர்களை பேச்சாளர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என சுட்டிக்காட்டியுள்ளார்.

## விக்னேஸ்வரன் அரசியலில்...

பொன்.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில்,“விக்னேஸ்வரன் வட மாகாண முதலமைச்சராக பதவியேற்ற போது பலரது எதிர்ப்புகளுக்கு மத்தியில் நான் அவரை வரவேற்றேன்.

அப்போது அவரிடம் ஒரு ஜனோவசியம் இருந்தது. ஆனால் இன்று அவர் அத்தனை பிற்போக்குதனங்களும் கொண்ட ஒருவராக இருக்கிறார்.

ஆரம்பத்தில் நான் அதை உணரவில்லை என்றாலும் பின்னர் உணர்ந்துகொண்டேன். அதிலொன்று தான் விக்னேஸ்வரனின் மின்னஞ்சல் விவகாரம்.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் வரப்போகின்றது என்ற சந்தர்பத்தில் 2019 ஆம் ஆண்டளவில் இந்த சம்பவம் நடந்தது.

அதிலிருந்து தெரிந்துகொண்டேன், விக்னேஸ்வரன் பிற்போக்குதனமான எண்ணம் கொண்டவர். அவர் ஒரு மக்கள் பிரதிநிதியாக இருக்கும் போது அவர் இன நலன்களை பேணும் வகையில் செயற்பட வேண்டுமே தவிர சுயநலன் கருதி பேசகூடாது.

எனவே விக்னேஸ்வரன் ஐயா அரசியலில் தொடர்வது தமிழ் மக்களுக்கு ஒரு சாபகேடு என்று, நான் அவருடன் பயணிப்பதை நிறுத்தி கொண்டேன்.”என தெரிவித்துள்ளார்.

## நல்லிணக்க செயற்பாடுகளுக்...

வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பற்றி இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

உண்மை மற்றும் மீள் இணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தேசிய காணி சபையை ஸ்தாபித்தல், தேசிய காணிக்கொள்கையை தயாரித்தல், காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் பற்றியும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டன.

இழப்பீடு செலுத்துவதற்கான அலுவலகத்தை ஸ்தாபித்தல், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தை ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் பற்றி தற்சமயம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் பணிகளை பூர்த்தி செய்து எதிர்வரும் சில மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு இதன்போது வலியுறுத்தினார்.

சிறைக்கைதிகளை விடுதலை செய்தல், அவர்களுக்கு மன்னிப்பு வழங்குதல் போன்ற விடயங்கள் பற்றிய விரிவான அறிக்கையை நீதியமைச்சின் ஊடாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

## தமிழ் மக்கள் சட்டம், ஒழுங்கு...

கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, பொருளாதார கொள்கைக்கு அமையவே வரி கொள்கை வகுக்கப்பட வேண்டும்.வரி அறவிடல் ஊடாக சமூக நலனை பேண முடியாது என்பது தற்போது உண்மையாகியுள்ளது. சுகாதாரம், இலவச கல்வி ஆகிய சேவைத் துறைகளுக்கு வரி அத்தியாவசியமானது.

நாட்டில் உள்ள பிள்ளைகள் இலவச கல்வியின் உச்ச பயனை பெறுகிறார்கள் என்று அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

நாட்டில் இலவச கல்வி என்பது மிகுதியாகியுள்ளதா என்பது சந்தேகத்துக்குரியது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இலவச கல்வி மற்றும் இலவச மருத்துவம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தில் 40 சதவீதம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

செலவுகளை வரையறுக்கும் போது இலவச கல்வி மற்றும் இலவச மருத்துவத்துக்கு அரசாங்கம் வழங்கும் நிலை கேள்விக்குரியது.

அரச பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் மாணவர்கள் இல்லை தனியார் வகுப்புகள் ஊடாக மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகுகிறார்கள்.

தனியார் வகுப்புகளுக்காக பெற்றோர் பாரிய நிதியை செலவழிக்க வேண்டியுள்ளது. இதுவே உண்மை. முறையற்ற வள பற்றாக்குறையால் அரச பாடசாலை கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கட்டம் கட்டமாக இலவச கல்வி என்பதில் இருந்து விலகுகிறது.

அறவிடப்படும் வரி முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பது சந்தேகத்துக்குரியது. வரி கொள்கை வகைப்படுத்தலில் வெளிப்படைத் தன்மை காணப்படுவதும் இல்லை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீது பல்வேறு வழிமுறையில் வரி அறவிடப்படுகிறது.

வரி கொள்கையை சிறந்த முறையில் செயற்படுத்துவதுடன், சட்டத்தையும் சிறந்த முறையில் பொதுவான தன்டையுடன் செயற்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துடன் இணக்கமாக செயற்படுபவர்களுக்கு ஒரு சட்டம்,எதிராக செயற்படுபவர்களுக்கு பிறிதொரு சட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை.

இருப்பினும் அவர் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது. தமிழ் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன. இன நல்லிணக்கம் தொடர்பில் ஒருபுறம் கதைத்து விட்டு பிறிதொரு புறம் தமிழ் பிரநிதிக்கு எதிராக செயற்படும் போது தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்ளுவார்கள் . இது பாரதூரமான பிரச்சினை.

குற்றமிழைப்பவர்களை சமமாக நடத்த வேண்டும். பாராளுமன்றத்தில் இந்த வித்தியாசத்தை அவதானித்தோம். ஆளும் தரப்புக்கு ஒரு சலுகை எதிர்க்கட்சிக்கு பிறிதொரு சலுகை அரசாங்கம் மனம்போன போக்கில் செயற்படுகிறது. தேர்தல் ஒன்றை நடத்தினால் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்பதால் தேர்தலையும் அரசாங்கம் பிற்போட்டுள்ளது என்றார்.

## சீனாவிற்கு குரங்குகளை ...

வேண்டியது கட்டாயமானது.

ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடகே முன்வைத்த தனிநபர் பிரேரணையை ஆதரிப்பதோடு இது தொடர்பாக அரசாங்கம் எந்த விதமான முயற்சிகள் எடுத்தாலும் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

அவசரமாக மந்திரிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் சொட்கண் துப்பாக்கியை கோருவதாகவும் அமைச்சர் விரைவில் இதற்கு தீர்வை தரவேண்டும் என்றும் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இடைக்கால நிர்வாக சபை...

பின் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் காலவரையின்றிப் பின்தள்ளப்பட்டு வரும் நிலையிலும், மாகாண அதிகாரங்கள் கணிசமாகப் பிடுங்கப்பட்டுள்ள நிலையிலும், இடைக்கால நிர்வாக சபை ஒரு சாதகமான உத்தி என்று விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிர்வாக ஏற்பாடு உருவாக்கப்பட்டால் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறுவதை முதன்மைச் செயன்முறையாக கொண்டிருக்கும் என்றும் விக்னேஸ்வரன் கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது, காலத்தை இழுத்தடிக்கும் உத்தியாக பேச்சை நடத்துகிறீர்களா? இவற்றை நிறைவேற்ற முடியுமென்றால் மாத்திரம் பேச்சைத் தொடருங்கள்.

அல்லது இப்பொழுதே பேச்சை கைவிட்டு விடலாமெனத் தான் குறிப்பிட்டதாக விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த யோசனை அருமையானது என்று குறிப்பிட்ட பிரதமர், இடைக்கால ஏற்பாட்டை உருவாக்குவதில் அரசு சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார் எனக் குறிப்பிட்ட விக்னேஸ்வரன் மீண்டும் பேச்சு இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும்
மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும்
தினசரி மற்றும்வார வெளியீடாக
வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

# யாழில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்த தடை! எடுக்கப்பட்டது தீர்மானம்



எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரை மாணவர்களுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடாத்துவதை இடைநிறுத்தல் தொடர்பில் நேற்றைய தினம் யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் கல்வியிலாளர்கள் சமூக ஆர்வலர்களின் பங்கு பெற்றதுடன் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் மேற்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை வடமாகாண ஆளுநர் இது பற்றி அறிந்து வினாவிய போது இவ் விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடல் நிறைவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:-

1 . பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வு கருத்தமர்வுகளை தனியார் கல்வி நிலையங்களையும் இணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு பிரதேச செயலக மட்டங்களில் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

2 . தரம் 9 வரையான மாணவர்களுக்கான பிரத்தியோக கல்வி நடவடிக்கை முற்றுமுழுதாக ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட வேண்டும்.

3 . கல்வி நிலையங்கள் சுகாதார வசதி, வகுப்பறை பிரமாணம் அரச கட்டடத் திட்டம் போன்றவற்றுக்கமைய அமைந்திருக்க வேண்டும்.

4. ஆளுநர், கல்வி திணைக்களத்துடன் கலந்துரையாடி தனியார் கல்வி நிலைய வரையறை வெளியிடப்படும். அதற்குள்ளடங்கும் கல்வி நிலையங்கள் உள்ளூராட்சி நிறுவனம், பிரதேச செயலகத்தில் பதிவு செய்தல் கட்டாயமாகும்.

5 . தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மிகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களைபோதிக்க வேண்டும்.

6 . இந்த செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுதை அவதானித்து முன்னேற்றம் காணப்பட சுகாதாரத்துறை, காவற்துறை, மதம் சார் பிரதிநிதி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கல்விசார் துறையுடன் தனியார் கல்வி நிலையத்தினர் தமக்கென சங்கத்தை உருவாக்க வேண்டும். உருவாக்கும் பட்சம் அவற்றின் பிரதிநிதிகளையும் இணைத்து குழுவானது பிரதேச, மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்படவுள்ளது.

7 . இத் தீர்மானங்கள் அனைத்தும் யூலை 1ம் திகதி முதல் அமுல்ப்படுத்தப்படுமென வலியுறுத்தினார்.

# வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்..! கலையரசன் எம்.பி சபையில் கோரிக்கை..!

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் தமது கடவுச்சீட்டுக்களை புதுப்பித்துக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், இதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தவராசா கலையரசன் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார சுமையை தாங்கிக் கொள்ளாத பலர் வெளிநாடுகளுக்கு சென்று தமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறானவர்கள் நாட்டுக்கு வரும்போது



தமது கடவுச்சீட்டுகளை புதுப்பிக்கும்போது பல்வேறு சிரமங்களையும், கால தாமத்தையும் எதிர்நோக்குகின்றனர்.

எனவே அவர்களது தேவையை இலகுபடுத்துவது குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் தலையாய கடமையாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தனியாருக்காக அரசாங்க காணிகள் சுவீகரிப்பு..! அரச அதிகாரிகள் மீது திலீபன் எம்.பி குற்றச்சாட்டு..!



பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இனங்காணப்பட்ட காணிகளை அரச அதிகாரிகளால் தனியாருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இவ்வாறான செயற்பாடுகள் வன்னி பிரதேசத்தில் இடம்பெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

மாவட்ட ரீதியில் உள்ள அரச அதிகாரிகள் அக்கறையின்றி செயற்படுகின்றனர். பொது மக்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பல நூறு ஏக்கர் காணிகளை கையகப்படுத்தக்கூடிய நிலைமை எமது மாவட்டங்களில் காணப்படுகின்றன.

வவுனியா ஒலுமடு, செட்டிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளில் உள்ள மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

# இலங்கையில் இனப்படுகொலைகள் குறித்து கனடாவின் பிரகடனம் ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம் என எச்சரிக்கை!



இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்ற கனடாவின் பிரகடனத்தை ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் கடற்படை தளபதியின் தலைமையில் நடைபெற்ற தேசிய பார்வை தொடர்பான கண்காணிப்பு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் தெரிவித்த அவர், கனடாவின் அரசியல்நோக்கம் கொண்ட பொய்யை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் தான் தனிநபர் பிரேரணையை கொண்டுவர திட்டமிட்டுள்ளதாகவும், ஆதாரங்கள் அற்ற யுத்தகுற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கனடா விதித்துள்ள பயணத்தடைக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் யுத்தத்தில் வெற்றிபெற்ற இராணுவத்தினருக்கு கடும் பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சவாலுக்கு உட்படுத்தாமல் தொடர அனுமதித்தால் அது தனிநாடு குறித்த கோரிக்கைகள் நியாயப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.